கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635
# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 118 | 03-11-2025 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volume 01 | Issue: 118 | 03-11-2025 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## பீகார் விரைவில் கிழக்கு இந்தியாவில் ஐவுளி ,சுற்றுலாவின் மையமாக மாறும் பிரதமர் மோடி ,"



"பாட்னா, நவ.3–

பீகார் போஜ்பூர் மாவட்டத்தில் உள்ள அர்ராவில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: காங்கிரஸ், ஆர்ஜேடி பீகாரின் அடையாளத்தை அழிக்க விரும்புகின்றன. வாக்காளர்கள் இரண்டு கட்சிகளைப் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, பாகிஸ்தானில் குண்டுவெடிப்புகள் நடந்தன. ஜம்மு காஷ்மீரில் எந்த அரசாங்கமும் 370 வது பிரிவை ரத்து செய்ய முடியாது. ஆனால் நான் ஒரு உத்தரவாதம் அளித்து அதைச் செய்தேன். பீகார் விரைவில் கிழக்கு இந்தியாவில் ஜவுளி மற்றும் சுற்றுலாவின் முக்கிய மையமாக மாறும். பீகார் இளைஞர்கள் அனைவரும் சொந்த மாநிலத்தில் பணியாற்ற வேண்டும். மாநிலத்தை பெருமைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். தேர்தலுக்கு பிறகு ஆர்ஜேடி மற்றும் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் மோதி கொள்ளும். காங்கிரஸ் ஆர்ஜேடி கட்சியை சேர்ந்த தேஜஸ்வியை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க விரும்பவில்லை. இரண்டு கட்சிகள் இடையே மிகப்பெரிய உட்கட்சி மோதல் நடந்து வருகிறது. வரும் ஆண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்கான அனைத்து திட்டங்களும் மக்கள் முன் வைக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் பேசினார். ",

## தீவிர வறுமை இல்லாத மாநிலம் கேரளா: முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு



திருவனந்தபுரம்: நவ.3–

தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

கேரளாவில் வறுமை ஒழிப்பு திட்டம் கடந்த 2021ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது தொடர்பாக மாநிலம் முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 64,006 குடும்பங்கள் தீவிர வறுமையில் வாடுவது தெரியவந்தது. இது மாநில மக்கள் தொகையில் 0.2 சதவீதம் ஆகும். அவர்களை வறுமையில் இருந்து மீட்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

பல்வேறு குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நிலமற்ற குடும்பங்களுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோருக்கு திறன்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன்காரணமாக 64,006 குடும்பங்களும் தீவிர வறுமையில் இருந்து மீண்டன.

கேரளா உதயமான தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற சிறப்பு சட்டப் பேரவைக் கூட்டத்தில், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்தார்.

இதை பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆளும் மார்க்சிஸ்ட் கூட்டணி அரசு மக்களை ஏமாற்றுவதாக எதிர்க்கட்சி தலைவர் சதீசன் குற்றம் சாட்டினார். முதல்வரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், கூட்டணி கட்சி எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் நேற்று மாலை கேரள உதய தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிலும், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா உருவெடுத்திருப்பதாக முதல்வர் பினராயி அறிவித்தார்.

அப்போது அவர் பேசும்போது, "கேரளா வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது. தீவிர வறுமை இல்லாத மாநிலமாக மாறியிருப்பதால் ஒவ்வொரு மலையாளியின் தலையும் நிமிர்ந்திருக்கிறது. ஏழை குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த வறுமை ஒழிப்பு திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்" என்று தெரிவித்தார்.

## கார்த்திகை தீபத் திருவிழாவுக்கு 4,764 சிறப்பு பஸ்கள் இயக்கம்: திருவண்ணாமலை கலெக்டர் தகவல்",

"சென்னை: நவ.3–

திருவண்ணாமலையில் அருணாசலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத் திருவிழா அடுத்த மாதம் (டிசம்பர்) 3ந்தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி பஸ்கள் இயக்கம் குறித்து அனைத்து மண்டல போக்குவரத்து கழக பொது மேலாளர்களுடன் ஆலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் தர்பகராஜ் தலைமை வகித்து பேசியதாவது: கார்த்திகை தீபத் திருவிழா அன்று நகருக்கு வெளியில் மார்க்கெட்டிங் கமிட்டி (திண்டிவனம் சாலை), சர்வேயர் நகர் (வேட்டவலம் சாலை), நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் (திருக்கோவிலூர் சாலை), மணலூர்பேட்டை சாலை, விட்டோ டிஜிட்டல் இடம், அத்தியந்தல் (செங்கம் சாலை), டான்போஸ்கோ பள்ளி (காஞ்சி சாலை), அண்ணா நுழைவு வாயில் (வேலூர் சாலை), கிளியாப்பட்டு சந்திப்பு (அவலூர் பேட்டை சாலை) ஆகிய 9 இடங்களில் தற்காலிக பஸ் நிலையங்கள் அமைய உள்ளன.மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் 4,764 சிறப்பு பஸ்கள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சார்பில் 70 மினி பஸ்களும் இயக்கப்பட உள்ளன.இவ்வாறு அவர் பேசினார்.",

# 'வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது'

## அனைத்துக் கட்சி கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: நவ.3–

"வாக்காளர்களின் வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது. அத்தகைய அச்சுறுத்தலை தடுக்க வேண்டியது ஜனநாயக சக்திகளான நம்முடைய கடமை." என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.



தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், தேமுதிக, விசிக, சிபிஎம், சிபிஐ, திராவிடர் கழகம், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றுள்ளன. பாமக, நாதக, தவெக, அமமுக, புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் இந்தக் கூட்டத்தை புறக்கணித்தன.

இந்தக் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "ஜனநாயகத்தின் உடலும், உயிரும் வாக்குரிமைதான். இப்போது வாக்காளர்களின் வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது. அத்தகைய அச்சுறுத்தலை தடுக்க வேண்டியது ஜனநாயக சக்திகளான நம்முடைய கடமை. அதனால்தான் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க இங்கே கூடியுள்ளோம்.

நாம் எந்த சீர்திருத்தத்துக்கும் எதிரி அல்ல. ஆனால், மக்களின் வாக்குரிமையை பறிக்கும், அவர்களை அச்சுறுத்தும் வகையில் பிஹாரில் செயல்படுத்தப்பட்ட எஸ்ஐஆர், இப்போது தமிழ்நாட்டில் நடக்கப் போகிறது. இதற்கு எதிரான உணர்வை வெளிப்படுத்த வேண்டியது முக்கிய தேவை. நேர்மையான தேர்தலை நடத்த உண்மையான வாக்காளர் பட்டியல் அவசியம் என்பதை மறுக்கவில்லை. ஆனால், அதற்கு உரிய கால அவகாசத்தை கொடுக்க வேண்டும். பதற்றமில்லாத சூழலில்தான் அதனை செய்ய வேண்டும்.

தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் சூழலில், முழுமையான திருத்தப் பணிகளை செய்ய துடிப்பது, உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் மட்டுமே. அதனையே பிஹாரில் செய்தனர். இப்போது மற்ற மாநிலங்களிலும் செய்ய நினைக்கிறார்கள். தமிழக மக்களின் உரிமையை காக்க, ஜனநாயகத்தை காக்க வரைவு தீர்மானத்தை முன்வைத்துள்ளோம்" என்றார். இதனை தொடர்ந்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

தீர்மானம்: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்தை தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்கா விட்டால் உச்ச நீதிமன்றத்தில் அனைத்துக்கட்சிகள் சார்பில் வழக்கு தொடர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிஹாரில் நடைபெற்ற குளறுபடிகளை சரி செய்யாமல் தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்ஐ ஆர். நடத்துவது வாக்குரிமையை பறிக்கும் செயல் என அத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல்வர் சமூக வலைதள பதிவு: இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் எஸ்ஐஆருக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை தேர்தல் ஆணையம் ஏற்காததால், உச்ச நீதிமன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் எஸ்ஐஆர் குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

## 59 டிஎஸ்பிக்கள் பணியிடமாற்றம்: டிஜிபி (பொறுப்பு) வெங்கடராமன் உத்தரவு

சென்னை: நவ.3–

தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் (பொறுப்பு) வெங்கடராமன் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது;

சென்னை மாநில சைபர் கமாண்ட் மையம் டிஎஸ்பியாக இருந்த இலக்கியா வேலூர் போதை பொருள் தடுப்பு பிரிவு சிஐடி டிஎஸ்பியாகவும் விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் டிஎஸ்பியாக இருந்த உமாதேவி கடலூர் டிஎஸ்பியாகவும் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னாமராவதி டிஎஸ்பியாக இருந்த கண்ணன் சிவகங்கை மாவட்டம் தேவக்கோட்டை டிஎஸ்பியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோல், கன்னியாகுமரி மாவட்டம் நில அபகரிப்பு சிறப்பு பிரிவு டிஎஸ்பியாக இருந்த கண்ணதாசன் திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் உதவி கமிஷனராகவும் புதுக்கோட்டை மாவட்டம் குற்றஆவணம் காப்பகம் டிஎஸ்பியாக இருந்த குமார், சென்னை தலைமையிடம் பொருளாதார குற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி டிஎஸ்பியாக இருந்தசபரிநாதன் சேலம் மாவட்டம் வாழப்பாடி டிஎஸ்பியாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் தேவக்கோட்டை டிஎஸ்பியாக இருந்த கவுதம் நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் டிஎஸ்பியாகவும் கோவை மாவட்டம் கருத்தம்பட்டி டிஎஸ்பியாக இருந்த தங்கராமன் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னாமராவதி டிஎஸ்பியாகவும் கள்ளக்குறிச்சி மாவட்டம் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு டிஎஸ்பியாக இருந்த ஜெயக்குமார் லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பியாகவும் சிவகங்கை மாவட்டம் குற்றப்பிரிவு டிஎஸ்பியாக இருந்த பிரதீப் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி டிஎஸ்பியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தருமபுரி மாவட்டம் ஆரூர் டிஎஸ்பியாக இருந்த கரிகால்பரி சங்கர் கோவை மாவட்டம் கருத்தம்பட்டி டிஎஸ்பியாகவும் மயிலாடுதுறை மாவட்டம் சிவில் சப்ளை சிஐடி டிஎஸ்பியாக இருந்த மயில்சாமி தூத்துக்குடி மாவட்டம் குற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும் தூத்துக்குடி மாவட்டம் குற்றப்பிரிவு டிஎஸ்பியாக இருந்த ராஜிவ் புதுக்கோட்டை மாவட்டம் குற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும் நாகப்பட்டினம் மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் டிஎஸ்பியாக இருந்த சந்திரசேகரன் திருவண்ணாமலை மாவட்டம் நிலம் அபகரிப்பு சிறப்பு பிரிவு டிஎஸ்பியாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாநகர சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணைய உதவி கமிஷனராக இருந்த நிக்சன் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வேளாங்கண்ணி டிஎஸ்பியாகவும் கிருஷ்ணகிரி மாவட்டம் குற்றப்பிரிவு டிஎஸ்பியாக இருந்த ராஜா ரவி தங்கம் கரூர் பொருளாதார குற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும் சேலம் மாநகர உதவி கமிஷனர் ஹரிசங்கரி சேலம் மாநகர பொருளாதார குற்றப்பிரிவு உதவி கமிஷனராகவும் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைபாளையம் டிஎஸ்பியாக இருந்த காயத்ரி தஞ்சை மாவட்டம் வல்லம் டிஎஸ்பியாகவும் சென்னை மாநில மனித உரிமை ஆணையம் டிஎஸ்பியாக இருந்த முருகேசன் நாகப்பட்டினம் மாவட்டம் குற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சேலம் மாவட்டம் வாழப்பாடி டிஎஸ்பியாக இருந்த சுரேஷ்குமார் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை டிஎஸ்பியாகவும் திருநெல்வேலி மாநகர நுண்ணறிவுபிரிவு உதவி கமிஷனராக இருந்த சுதீர்லால் மயிலாடுதுறை மாவட்டம் சிவில் சப்ளை சிஐடி டிஎஸ்பியாகவும் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை டிஎஸ்பியாக இருந்த பார்த்திபன் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி டிஎஸ்பியாகவும் சேலம் மாநகர பொருளாதார குற்றப்பிரிவு உதவி கமிஷனராக இருந்த சந்திரசேகரன் திருப்பூர் மாநகர மத்திய குற்ற ஆவணம் காப்பகம் உதவி கமிஷனராகவும் கோவை மாநகர மத்திய குற்றப்பிரிவு உதவி கமிஷனராக இருந்த சரவணன் சேலம் டவுன் டிஎஸ்பியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோல், காஞ்சிபுரம் மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் டிஎஸ்பியாக இருந்த ராதாகிருஷ்ணன் காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட உத்திரமேரூர் டிஎஸ்பியாகவும் தஞ்சை மாவட்டம் வல்லம் டிஎஸ்பியாக இருந்த கணேஷ்குமார் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் டிஎஸ்பியாகவும் கடலூர் டிஎஸ்பியாக இருந்த ரூபன்குமார் விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் டிஎஸ்பியாகவும் மதுரை டிவிஷன் சிலை கடத்தல் தடுப்பு பிரிவு சிஐடி டிஎஸ்பியாக இருந்த செந்தில்குமார் சென்னை சிலை கடத்தல் தடுப்பு பிரிவு சிஐடி தலைமையிட டிஎஸ்பியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாநில சைபர் கமாண்ட் சென்டர் டிஎஸ்பியாக இருந்த கீதா சென்னை சிபிசிஐடி சைபர் க்ரைம் பிரிவு டிஎஸ்பியாகவும் மதுரை சிவில் சப்ளை சிஐடி டிஎஸ்பியாக இருந்த செந்தில் இளந்திரையன் திண்டுக்கல் மாவட்டம் நில அபகரிப்பு சிறப்பு பிரிவு டிஎஸ்பியாகவும் சென்னை பொருளாதார குற்றப்பிரிவு தலைமையிட டிஎஸ்பியாக இருந்த பூசை துரை, சோசியல் மீடியா மையம் டிஎஸ்பியாகவும் தேனி மாவட்டம் உத்தமபாளையம் டிஎஸ்பியாக இருந்த வெங்கடேசன் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைபாளையம் டிஎஸ்பியாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர, விருதுநகர் மாவட்டம் திருச்சுழி டிஎஸ்பியாக இருந்த பொன்னரசு தேனி மாவட்டம் உத்தமபாளையம் டிஎஸ்பியாகவும் புதுக்கோட்டை மாவட்டம் நில அபகரிப்பு சிறப்பு பிரிவு டிஎஸ்பி சிவகுமார் மதுரை சிவில் சப்ளை சிஐடி டிஎஸ்பியாகவும் நீலகிரி மாவட்டம் தேவாலா டிஎஸ்பியாக இருந்த ஜெயபாலன் திருப்பூர் மாநகர சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் உதவி கமிஷனராகவும் திருவண்ணாமலை மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் டிஎஸ்பியாக இருந்த சுரேஷ் சண்முகம் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி டிஎஸ்பியாகவும் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி டிஎஸ்பியாக இருந்த பாண்டிஸ்வரி சிவகங்கை மாவட்டம் குற்ற ஆவணம் காப்பகம் டிஎஸ்பியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு டிஎஸ்பியாக இருந்த மனோகரன் கிருஷ்ணகிரி மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் டிஎஸ்பியாகவும் ஈரோடு சிறப்பு அதிரடிப்படை டிஎஸ்பியாக இருந்த சுகுமார் ஈரோடு மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு டிஎஸ்பியாகவும் கிருஷ்ணகிரி மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் டிஎஸ்பியாக இருந்த ஜெய்சிங் ஈரோடு மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் டிஎஸ்பியாகவும் திருச்சி மாநகர சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையம் உதவி கமிஷனராக இருந்த தங்கதுரை கோவை மாவட்டம் குற்ற ஆவணம் காப்பகம் டிஎஸ்பி என தமிழகம் முழுவதும் 59 டிஎஸ்பிக்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## குழந்தைகள் தினத்தையொட்டி ஈரோடு வாசன் கண் மருத்துவமனையில் ஒரு மாதம் இலவச கண் மருத்துவ முகாம் நடைபெறுகிறது



ஈரோடு: நவ.3–

ஈரோடு வாசன் கண் மருத்துவமனையில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நவம்பர் மாதம் முழுவதும் குழந்தைகளுக்கு இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

ஈரோடு ஈவிஎன் ரோட்டில் உள்ள வாசன் கண் மருத்துவமனையில் குழந்தைகள் வருகின்ற 14ஆம் தேதி குழந்தைகள் தினத்தை முன்னிட்டு இம்மாதம் முழுவதும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது என்று மருத்துவமனை டாக்டர் மனோரமா எஸ் பஹேதி தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும் போது குழந்தைகளுக்கு தற்போது கண் பார்வை குறைபாடுகள் ஏற்பட்டு வருகிறது. இதனை போக்குவதற்கு ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். மேலும் குழந்தைகள் செல் அதிகநேரம் பயன்படுத்துவதையும், டிவி போன்றவைகளை அதிக நேரம் பார்ப்பதை தவிர்க்க வேண்டும்.

பெற்றோர்கள் இதைக் கவனத்தில் கொண்டு குழந்தை களுக்கு அதிக நேரம் விளையாடுவதற்கு நேரம் ஒதுக்கி கொடுக்க வேண்டும். 20 நிமிடங்கள் ஒரே பார்வையில் கவனத்தை செலுத்தி வந்தாலே கண்ணுக்கு பிரச்சனை ஏற்படும். எனவே 20 நிமிடங்கள் ஒரு செயலை செய்ய ஆரம்பித்தால் அதன்பின் தங்களது கவனத்தை வேறு திசைக்கு திருப்ப வேண்டும். மேலும் குழந்தைகளுக்கு தற்போது கண்பார்வை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஈரோடு வாசன் கண் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான இலவச கண் மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

இதனை பொது மக்கள் மற்றும் பெற்றோர்கள் இந்த இலவச முகாமில் கலந்து கொண்டு குழந்தைகளின கண்களை பரிசோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பள்ளி குழந்தைகளுக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டது.

நிகழ்ச்சியினை சேலம், கோவை, ஈரோடு வாசன் ஐ கேர் மருத்துவமனை கிளை மேலாளர் வெங்கடேசன், சேலம் கிளை மேலாளர் செல்வம், ஈரோடு கிளை மேலாளர் கோவிந்தராஜ் மற்றும் அலுவலர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

### மக்களாட்சியின் அடித்தளமே வாக்கு வங்கிதான்: கமல்ஹாசன் பேச்சு

சென்னை: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் ஏன் இவ்வளவு அவசரமாக நடைபெறுகிறது என்று கமல்ஹாசன் கேள்வி கேட்டுள்ளார். மக்களாட்சியின் அடித்தளமே வாக்கு வங்கிதான். தகுதியுள்ள ஒரு நபரின் பெயர்கூட வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படக் கூடாது. அவசரமான எஸ்.ஐ.ஆரால் தான் பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டது

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏழாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவி ஏற்பது உறுதி

### முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேச்சு

விழுப்புரம், நவ. 3–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஏழாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவி ஏற்பது உறுதி எனசெஞ்சியில் நடைபெற்றவாக்குச்சாவடி முகவர்கள், டிஜிடல் பூத்ஏஜென்ட் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ உறுதிபட தெரிவித்தார்......

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி கிழக்கு, மதியம் .மேற்கு ஆகிய ஒன்றியங்கள் செஞ்சி, அனந்தபுரம் பேரூர் திமுக சார்பில் வாக்குச் சாவடிமுகவர்கள், பூத் டிஜிடல் ஏஜன்ட் நிர்வாகிகள்கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர்கள் ஆறுமுகம், வாசு,மணிவண்ணன்,டாக்டர் கல்யாண் குமார் ஆகியோர் தலைமை தாங்கினர்.செஞ்சி சட்டமன்றத் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய குழு தலைவர் விஜயக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து




கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்று கடந்த நான்காண்டுகாலத்தில் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டங்களையும், சொல்லாத திட்டங்களை செயல்படுத்தி உள்ளார். 10 ஆண்டுகாலத்தில் செய்தா திட்டங்கள் 4 ஆண்டுகாலத்தில் முதலமைச்சர் செய்துள்ளார். முதலமைச்சர் செய்த திட்டங்களை இந்தியா மட்டும் அல்ல உலகமே பாராட்டும் வகையில் முதலமைச்சர் திட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ளது. முதலமைச்சரின் திட்டங்களை இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றனர். முதலமைச்சரின் சாதனைகளைகிராமங்களில் உள்ள மக்களிடம்அனைத்து நிலையில் உள்ள திமுக நிர்வாகிகள் கொண்டு சேர்க்க வேண்டும்.மேலும் தற்போது ஒன்றிய அரசு இந்திய தேர்தல் ஆணையம் மூலம் நவம்பர் 4 ஆம் தேதி முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தைசெயல்படுத்த உத்தரவிட்டப்பட்டுள்ளது.இந்தப் பணியின் போதுதிமுக நிர்வாகிகள் கவனமுடன் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் பணியை மேற்கொள்ள வேண்டும் என முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் அந்த வகையில் என் வாக்குச்சாவடி...... வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்புடன் திமுக நிர்வாகிகள் பாக முகவர்கள் பூத் டிஜிட்டல் முகவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் எனவும் ஒவ்வொரு ஊராட்சியிலும் முதலமைச்சரின் சாதனைகளையும் திட்டங்களையும் எடுத்துக் கூற வேண்டும்.திமுக நிர்வாகிகள் அனைவரும் கவனம் செலுத்தி திமுக ஆட்சியில் செய்த சாதனைகளை ஒவ்வொரு வீடாக எடுத்து சொல்லி வாக்குகள் சேகரிக்க வேண்டும் ,செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெறுவதற்கு அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

75 ஆண்டுபவள விழா கண்ட திமுக 1000 ஆண்டு காலத்திற்கு யாராலும் தொட்டுப் பார்க்க முடியாதஅளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி உள்ளளார்.அந்த வகையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஏழாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவி ஏற்பது உறுதி என முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ உறுதி பாடத் தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ் செழியன்,

விஜயராகவன், பச்சையப்பன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத், பேரூராட்சி மன்ற தலைவர்கள் செஞ்சி மொக்தியார் அலி மஸ்தான், அனந்தபுரம் முருகன், துணைசேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்தீபன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நகர செயலாளர் கார்திக் நன்றி கூறினார்.

## நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அடாவடியில் ஈடுபட்ட திமுக பிரமுகர். நடவடிக்கை எடுக்கக் கோரி கதறி அழும் விதவைப் பெண்..

பள்ளிபாளையம்.நவ.03

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் அருகே தனது நிலத்தை திமுக பிரமுகர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு தன்னிடம் அடாவடியான முறையில் தகராறு செய்து வருவதாக விதவைப் பெண் ஒருவர் கண்ணீர் மல்க காவல்துறையிடம் புகார் கொடுத்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் அருகே உள்ள இளையாம்பாளையம் கொசப்பள்ளி காடு பகுதியை சேர்ந்தவர் கஜேந்திரன் இவரது மனைவி மகேஸ்வரி.

கஜேந்திரன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்ட நிலையில், அவருக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தில் அவரது மனைவி மகேஸ்வரி வேளாண் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் மறைந்த கஜேந்திரனின் சகோதரி





ஜோதிமணி மற்றும் திமுக பிரமுகரான அவரது கணவர் விஜயகுமார் ஆகிய இருவரும் சேர்ந்து, மகேஸ்வரி இடம் தகராறில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

மேலும் தனது கணவருக்கு சொந்தமான நிலத்தில் மகேஸ்வரி பயிர் நடவு பணியில் ஈடுபட்டிருந்தபோது கஜேந்திரனின் அக்கா ஜோதிமணி அவரது கணவர் திமுக பொறுப்பாளர் விஜயகுமார் மற்றும் உறவினர்கள் தனபால் , ராசம்மாள் உள்ளிட்டோர் மகேஸ்வரி இடம் நேரில் சென்று இந்த நிலத்தில் எங்களுக்கும் பங்கு உண்டு என்று கூறி தகராறு ஈடுபட்டு கடும் வாக்குவாதம் செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மகேஸ்வரி வெப்படை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிகிறது. தொடர்ந்து போராடிய நிலையில் ஒப்படை காவல்துறையினர் இருதரப்பினரையும் அழைத்து சமாதான பேச்சு வார்த்தை நடத்தினர்.

இருந்தபோதிலும் நான் ஆளுங்கட்சியை சேர்ந்தவன் திமுக பிரமுகர் என்று கூறி போலீசாரிடமும் விஜயகுமார் என்ற அந்த நபர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தெரிகிறது.

மேலும் பள்ளிபாளையம் ஒன்றிய திமுக பொறுப்புக் குழு உறுப்பினராக இருந்து வரும் விஜயகுமார் என்ற அந்த நபர் மீது பல்வேறு முறைகேடுகளுக்கான குற்ற சாட்டுகளை அப்பகுதி பொதுமக்கள் முன்வைக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட காவல்துறையினர் பாதிக்கப்பட்டுள்ள விதவைப் பெண்ணிற்கு சட்டப்படியான நியாயம் கிடைக்க காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்போது இப்போது மக்கள் மேலும் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த சம்பவம் பள்ளிபாளையம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## எரிமேடையை பயன்பாட்டிற்கு துவக்கி வைத்த எம்எல்ஏ.



சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூரமங்கலம் பகுதி 22 வது கோட்டம் பட்டக்காரன் தெரு, மொரம்புக்காடு,மோட்டூர்,குடுமியான் தெரு பகுதி மக்கள் இடுகாட்டிற்கு மயான எரிமேடை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 6.50 இலட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்டது. இன்று பட்டக்காரன் தெரு,மொரம்புக்காடு,மோட்டூர்,குடுமியான் தெரு ஆகிய பகுதியில் உள்ள முக்கியஸ்தர்களை வரவழைத்து மயான எரிமேடையை அவர்களிடம் ஒப்படைத்த சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள்.





திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ரங்கம், சிவானி கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்ற ஸ்ரீ ரங்கம் சட்டமன்ற தொகுதி 139ல் மேற்கொள்ள வேண்டிய வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பான வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் தலைமையுரையாற்றி சிறப்பு பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி வரும் நவம்பர் 4ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில், சேலம் மாவட்ட வாக்காளர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் ரா.பிருந்தாதேவி வேண்டுகோள்

சேலம். நவ. 3–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி வரும் நவம்பர் 4ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில், சேலம் மாவட்ட வாக்காளர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் ரா. பிருந்தாதேவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்திய தேர்தல் ஆணைய அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் சேலம் மாவட்டத்தில் நவம்பர் மாதம் 4 முதல் டிசம்பர் 4 ஆம் தேதி வரையில் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பணிகளின்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுதோறும் சென்று 2025 வாக்காளர் பட்டியலில் இடம்பெற்று இருக்கும் அனைத்து வாக்காளர்களுக்கும் தனித்தனியாக பெயர், புகைப்படத்துடன் அச்சிடப்பட்ட படிவங்களை வழங்குவார்கள்.

இந்த படிவத்தை பெற்ற



வாக்காளர்கள், அதில் இடம் பெற்றுள்ள அட்டவணையில் தங்களது பெயர் 2002 அல்லது 2005 ஆம் ஆண்டு (நகர்ப்புற தொகுதிகள்) கடைசியாக நடைபெற்ற தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்ததை ஸ்ர்றங்ழ்ள்.ங்ஸ்ரீண்.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற இணையதளத்தில் சரிபார்த்து, அதனை பூர்த்திசெய்து வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் கையொப்பமிட்டு ஒப்படைக்க வேண்டும்.

இந்த படிவத்துடன் வேறு எந்த ஆவணமும் இணைக்க வேண்டியதில்லை.

முந்தைய தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்த விவரத்தை பூர்த்தி செய்வதில் ஏற்படும் சந்தேகங்களுக்கு சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரையோ, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் செயல்பட்டுவரும் சிறப்பு தீவிர திருத்தம் உதவி மையம் மற்றும் 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு படிவங்களை பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரிடமோ அல்லது மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்திலோ நேரடியாக தமது கணக்கெடுப்பு படிவத்தை பதிவேற்றம் செய்யலாம். இந்த காலத்தில் புதிதாக பெயர் சேர்க்க விரும்பும் 18 வயது நிரம்பியவர்கள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரிடமிருந்து படிவம் 6 ஐ பெற்று பூர்த்தி செய்து வழங்கலாம்.

படிவங்களை பூர்த்தி செய்ய இயலாத வாக்காளர்களுக்கு சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உதவுவார்கள். பணிநிமித்தமாக வெளியூர் சென்றிருக்கும் வாக்காளர்கள் இணையதளம் மூலமாக தங்களது படிவத்தை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து டிசம்பர் 4 ஆம் தேதி வரை பதிவேற்றம் செய்யலாம். இந்த படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படும் அனைத்து வாக்காளர்களது பெயர்களைக் கொண்டு வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்து டிசம்பர் 9 ஆம் தேதி வெளியிடப்படும்.

எனவே, தற்போதைய பணிகளின் போது கணக்கெடுப்பு படிவத்தை பெற்று பூர்த்தி செய்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து வாக்காளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# சத்தியமங்கலம் புனித அந்தோனியார் ஆலய கல்லறைத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது





செஞ்சி,நவ.03

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே சத்திய மங்கலம்: சத்தியமங்கலம் புனித அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்திர கல்லறைத் திருவிழா ஆன்மிகமும் பக்தி உணர்வும் மிகுந்த சூழலில் சிறப்பாக நடைபெற்றது.

இத்திருவிழா ஒவ்வொரு ஆண்டும், மறைந்த ஆத்மாக்களின் நினைவாக சத்தியமங்கலம் கல்லறைத் தோட்டத்தில் பக்தியுடன் நடத்தப்படுவது வழக்கம்.

இந்நிகழ்வில், சத்தியமங்கலம் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை ஏ. சிரில் தலைமையில் திருவிழா நடைபெற்றது. இதில் மண்ணின் மைந்தர் பாதர் சுதாகர் கலந்து கொண்டு, பங்குத் தந்தையுடன் இணைந்து கூட்டு திருப்பலி நடத்தினர்.


திருப்பலிக்குப் பிறகு, பங்குத் தந்தை ஏ. சிரில் அவர்கள் கல்லறைத் தோட்டத்திற்குள் சென்று, ஒவ்வொரு கல்லறையிலும் தீர்த்தம் தெளித்து, மந்திரித்து, ஆசீர்வாதம் வழங்கினார்.

மக்கள் தங்கள் மறைந்த உறவினர்களின் நினைவாக கல்லறைகளின் அருகில் நின்று மெழுகுவர்த்தி ஏற்றி, மலர் அர்ப்பணித்து, கண்ணீர் மல்க பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அப்பொழுது பலரும் ஆன்மிக துயரமும் இறைநம்பிக்கையும் கலந்த உணர்வுடன் இறைவனிடம் பிரார்த்தனை செய்தனர்.

இந்த திருவிழாவில் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு புனித அந்தோனியாரிடம் தங்கள் வேண்டுதல்களை சமர்ப்பித்தனர்.

# சோழப்பேரரசி செம்பியன் மாதேவி பேரரசிக்கு அரசு விழா எடுக்க வேண்டும் என வரலாறு மீட்புக் குழு வேண்டுகோள்





அரியலூர், நவ. 3–

அரியலூர் மாவட்டம் திருமழபாடி அருகே உள்ள செம்பியக்குடி கிராமத்தில் கிராம மக்களால் 1000 கிலோவில் ஐம்பொன்னாலான சிலையை சோழப்பேரரசி செம்பியன் மாதேவிக்கு நிறுவினர். மழநாட்டை ஆட்சி செய்த கண்டராதித்த சோழனின் இரண்டாவது மனைவியான செம்பியன் மாதேவி பேரரசி சிறு வயதில் இருந்தே சிவத் தொண்டில் ஈடுபட்டு வந்தவர். உலகின் முதல் கற்றளி கட்டுமானக் கலையின் முன்னோடியாகவும் பல சிவாலயங்களை நிறுவியவராகவும் செங்கற்களில் இருந்த பல சிவாலயங்களை கருங்கற்களை கொண்டு புனரமைத்தும் வேளாண் தொழிலைப் போற்றும் விதமாக பல ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவு கொண்ட நீர் நிலைகளை உருவாக்கியும் மாமன்னன் இராசராசன் இராசேந்திரன் அருஞ்செய சோழன் உத்தம சோழன் கண்டராதித்த சோழன் உள்ளிட்ட சோழ மாமன்னர் களுக்கெல்லாம் வழிகாட்டியாய் திகழ்ந்த செம்பியன் மாதேவி பிறந்த தினமான சித்திரை கேட்டை நட்சத்திரத்தில் ஆண்டுதோறும் அரசு ஆண்டுவிழாவாக கொண்டாட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தெற்காசியாவையே சோழர்களின் குடையின் கீழ் ஆட்சிபுரிய காரணமாக அமைந்த செம்பியன் மாதேவி பேரரசிக்கு மணிமண்டபம் கட்டி வருங்கால தலைமுறை அறிந்து கொள்ள செய்ய வேண்டிய கடமை அரசுக்கு உண்டு என வரலாறு மீட்புக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் தங்க சண்முக சுந்தரம் மாமன்னன் இராசராசன் 1040 வது சதய விழாவை முன்னிட்டு செம்பியன் மாதேவி பேரரசிக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கோரிக்கை விடுத்தார். இந்நிகழ்ச்சியில் செம்பியன் மாதேவி அறக்கட்டளை நிர்வாகிகள் சிவ சண்முகவேல், கருப்பையா, சுப்ரமணியன், ரமேஷ், செந்தில்குமார், ராஜிமோல், சசிகுமார், சுந்தர்ராஜ் திருச்சி மண்டல வரலாறு மீட்புக் குழு இணை சல்மான் ஜமீல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும்: திருமாவளவன்

சென்னை: நவ. 3=

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்று திருமாவளவன் கூறியுள்ளார். பழங்குடி மக்களிடம் தேர்தல் ஆணையம் கேட்கும் ஆவணங்கள் இருக்க வாய்ப்பில்லை. எஸ்.ஐ.ஆர். குறித்து கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரபு நாடுகளில் பணிபுரியும் முஸ்லிம்கள் பலரும் எஸ்ஐஆரின் போது ஊர் திரும்ப



முடியாததால் நீக்கப்படக் கூடும். தற்போதைய வாக்காளர் பட்டியலை 2002 2004 பட்டியலோடு பொருத்தி பார்த்ததில் 40% பெயர்களே முழுமையாக இருக்கும். 10 முதல் 20% வாக்காளர்கள் பெயர் விடுபட்டுப்போகும். சுமார் ஒரு கோடி வாக்காளர்கள் பெயர் விடுபட்டுப்போகும்

# அரியலூர் நமது ஆட்சி வந்தவுடன் சோழர் பாசன திட்டத்திற்கான அரசாணை ஒரு மாதத்தில் வெளியிடப்படும்

## அன்புமணி ராமதாஸ் உறுதி




அரியலூர். நவ. 3–

அரியலூர் மாவட்டத்தில் தமிழக மக்கள் உரிமை மீட்பு பயணத்தில் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் தா. பழூர் ஒன்றியத்தில் உள்ள சித்தமல்லி தீர்த்தக்கத்தினை பார்வையிட்டார் அப்பொழுது நீர் தேக்கத்தின் பரப்பளவு பாசன வசதி பெறும் விவசாய நிலங்கள் குறித்து அப்பகுதியை சேர்ந்த விவசாயிகளிடம் கேட்டறிந்தார்

பின்னர் அரியலூர் மாவட்டத்தில் சோழர் பாசன திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்த வலியுறுத்தி அன்புமணி ராமதாஸ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோ கலந்து கொண்டனர்

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அன்புமணி ராமதாஸ் அரியலூர் மாவட்டத்தில் சோழர்களின் ஆட்சி காலத்தில் பொன்னேரி கண்டிராதித்தம் பெரிய ஏரி உள்ளிட்ட பல்வேறு ஏரிகள் ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெட்டப்பட்டு பாசன வசதி பெற்று வந்தன. இந்த ஏரிகளை முறையாக பராமரிக்காத நிலையில் அரியலூர் மாவட்டத்தில் சோழர் பாசன திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என எனது தலைமையில் மூன்று வருடங்களுக்கு முன்பு நடைபயணம் கையெழுத்து இயக்கம் உள்ளிட்டவைகளில் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஈடுபட்டு இது குறித்து அரசிடமும் அறிக்கை அளிக்கப்பட்டது தற்போது வரை இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை நீர் மேலாண்மை பற்றி அறியாத திமுக அரசு இன்னும் நான்கு மாதங்களில் அகற்றப்படும் பிறகு வரக்கூடிய நமது ஆட்சியில் ஒரே மாதத்தில் சோழர் பாசன திட்டம் அமல்படுத்துவதற்கான அரசாணை வெளியிடப்படும் என கூறினார்

நமது ஆட்சி என்றால் பாட்டாளி மக்கள் கட்சி தலைமையிலான ஆட்சியா கூட்டணி ஆட்சியா என்ற கேள்விக்கு அப்பொழுது தெரியவரும் எனக் கூறினார் கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறதா என்று கேள்விக்கு நடைபெற்று வருவதாகவும் அது குறித்து தகவல் தெரிவிக்கப்படும் எனவும் கூறினார் என்டிஏ கூட்டணியில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு உண்டா என்ற கேள்வியால் டென்ஷனான அன்புமணி ராமதாஸ் என்னிடமிருந்து எதையாவது வாங்க வேண்டும் என்பது உங்களது எண்ணம்மா எனக் கூறி சென்றார்

# இலங்கை கடற்படையால் மீண்டும் ராமேஸ்வரம் மீனவர்கள் விரட்டியடிப்பு

ராமேஸ்வரம்: நவ.3–

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை துப்பாக்கி முனையில் இலங்கை கடற்படை விரட்டியடித்ததால் குறைவான மீன்பாடுடன் கரை திரும்பினர். இதனால் மீனவர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று 313 க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க புறப்பட்டு சென்றனர்.

மதியம் 100க்கும் மேற்பட்ட படகுகள் கடல் எல்லையோரம் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது கச்சத்தீவு கடல் பகுதியில் இருந்து சிறிய ரக ரோந்து படகுகளில் வந்த இலங்கை கடற்படையினர் திடீரென மீன்பிடி படகுகளை சுற்றி வளைத்து மீனவர்களை அச்சுறுத்தினர். எல்லை தாண்டி வந்து மீன்பிடிப்பதாக கூறி மீனவர்களை தொடர்ந்து மீன்பிடிக்க விடாமல் துப்பாக்கி முனையில் விரட்டியடித்தனர்.

இதனால், அச்சமடைந்த மீனவர்கள் உடனடியாக நடுக்கடலில் மீன்பிடி வலைகளை வெட்டி வீசிவிட்டு இலங்கை கடற்படை பிடியில் சிக்காமல் தப்பி வந்தனர். பின்னர், தனுஷ்கோடி கடல் பகுதியில் மீன்பிடித்தனர். மீனவர்களில் ஒரு பகுதியினர் கைது நடவடிக்கைக்கு அஞ்சி இரவே கரை திரும்பினர். மற்றவர்கள் இன்று காலை சுமாரான மீன்பாடுடன் கரை திரும்பினர். இதனால் தங்களுக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தொடர்ந்து சிறைபிடித்துவரும் நிலையில் தற்போது நடுக்கடலில் விரட்டியத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் நிகழ்ச்சி ஈரோடு சூர்யா பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.




ஈரோடு நவ.03

ஈரோடு அருகே செயல்பட்டு வரும் சூர்யா இன்ஜினியரிங் கல்லூரியில் தொழில் முனைவோர்கான விழிப்புணர்வு கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற்றது.


ஈரோடு மாவட்டம் மேட்டுக்கடை அருகே உள்ள சூர்யா இன்ஜினியரிங் கல்லூரியில் இளம் தொழில் முனைவோருக்கான கருத்தரங்கம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை கல்லூரியின் தொழில் முனைவோர் மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர் மேலாண்மை துறை சார்ந்த பேராசிரியை ஸ்டெல்லா ஏஞ்சல் ஏற்பாடுகளை செய்திருந்தார். இதில் மேலாண்மை துறையைச் சார்ந்த துறையின் தலைவர் விமலா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் கல்லூரியின் முதல்வர் முனைவர் டாக்டர் மனோகரன் அவர்கள் பாராட்டுறை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக கே. சசிகுமார் .ஈரோடு மாவட்ட திட்ட மேலாளர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் பேசும்போது.. சிறு குறு தொழில் முனைவோருக்கு மாநில அரசு மூலம் பெறப்படும் பயன்பாட்டையும் திட்டங்களையும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இதன் மூலம் தொழில் செய்து பயன் அடைந்தவர்களை பற்றியும் அவர் எடுத்துக் கூறினார். நிகழ்ச்சியில் இறுதியில் மாணவர்கள் தங்களின் சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டனர். மேலும் இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் மற்றும்ப பொறுப்பாளர் ஆர் டி என். கே. கலைச்செல்வன் மற்றும் பொருளாளர் வி.டி கேசவன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியை பாராட்டினர்.

# அடிப்படை வசதிகளின்றி ஓட்டுக்கூரையில் இயங்கும் ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்.





சேலம். நவ.3–

சேலம் மாவட்டத்தில் 1929இல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு நூற்றாண்டு காணும் ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், போதிய அடிப்படை வசதிகளின்றி சிறிய ஓட்டுக்கூரை கட்டடத்தில் இயங்கி வருகிறது.

எனவே, புதிய கட்டடங்கள் அமைத்து நவீன வசதிகளுடன் 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தரம்உயர்த்த வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர் பேரூராட்சி, சேலம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 2 கி.மீ. தொலைவில் புத்திரகவுண் டன் பாளையம் கல்வராயன் மலை கருமந்துறை சாலையில் அமைந்துள்ளது ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்.

இப்பகுதியைச் சேர்ந்த 10 கிராம மக்களின் நலன்கருதி, பழைமையான ஏத்தாப்பூர் சாம்பவமூர்த்தீஸ்வரர் கோயிலுக்கு எதிரே வசிஷ்டநதி கரையோரத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1929 நவ. 25 ஆம் தேதி சேலம் மாவட்டக்குழு வாயிலாக அரசு மருந்தகம் என்ற பெயரில் மருத்துவமனை அமைக்கப்பட்டது.

50 ஆண்டுகளுக்கு முன்பு இந்த அரசு மருந்தகம் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. அறுவை சிகிச்சை அரங்கு, உள் நோயாளிகள் பிரிவு, ஆய்வகம், பிரேத பரிசோதனைக் கூடம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு 24 மணிநேரமும் இயங்கி வந்தது. இந்நிலையில், இங்கு பணிபுரிந்த மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களின் கவனமின்மையால், இந்த அரசு மருத்துவமனை 25 ஆண்டுகளுக்கு முன்பு அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் குறைக்கப்பட்டது.

தற்போது, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலை, மாலை வேளைகளில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இரவு நேரங்களில் போதிய மருத்துவர்கள், செவிலியர், மருத்துவ பணியாளர்கள் இல்லாததால், சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் முதலுதவி சிகிச்சை பெற வழி இல்லாமல் சிரமமடைகின்றனர். ஏத்தாப்பூரில் ஓட்டுக் கூரை கட்டடத்தில் இயங்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம். ஏத்தாப்பூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற ஆத்தூர், சேலம், வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைகளுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

பழைய ஓட்டுக்கூரை கட்டடங்களிலேயே இன்றளவிலும் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இதனால், சிகிச்சைக்கு வரும் நோயாளிகள், கர்ப்பிணிகள் மட்டுமின்றி, சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்களும் அவதிக்குள்ளாகின்றனர்.

எனவே, ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், பழுதடைந்த ஓட்டுக்கூரை கட்டடங் களை அகற்றி, புதிய கான்கிரீட் கட்டடங்கள் அமைத்து நவீன அறுவை சிகிச்சை அரங்கம், உள்நோயாளிகள் படுக் கைப் பிரிவு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும். கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களை நியமித்து 24 மணிநேரமும் செயல்படும் வகையில் தரம் உயர்த்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அரியலூர் திமுகவின் கைக்கூலிகள் ஐயாவை சுற்றி சுற்றி ஐயாவின் மனசை மாற்றி ஐயாவை குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் என அன்புமணி ராமதாஸ் குற்றச்சாட்டு

* காடுவெட்டி குரு இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என காடுவெட்டி குருவை நினைவுகூர்ந்த அன்புமணி ராமதாஸ்
* வருகின்ற சட்டமன்ற தேர்தலில் ஒரு வன்னியர் கூட திமுகவிற்கு ஒட்டு போடக்கூடாது எனவும் அறை கூவல்



அரியலூர், நவ.3

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி அன்புமணி ராமதாஸ் அணியின் சார்பில் உரிமை மீட்க தலைமுறை காக்க நடைபயணத்தின் முடிவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது பொதுக்கூட்டத்தில் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் அப்பொழுது உங்கள் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும். திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதே இந்த நடைபயணத்தின் முக்கிய நோக்கமாகும். அதன் அடிப்படையிலேயே இந்த நடைபயணத்தை மேற்கொள்கிறேன். ஊழல் திமுக ஆட்சியை விரட்டி அடியுங்கள். தூக்கி எறியுங்கள் அடுத்தது நமது ஆட்சி உறுதியாக வரும். லட்சக்கணக்கான மக்கள் மாற்றம் வரவேண்டும் என அனைத்து தரப்பு மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரியலூர் மாவட்டத்தில் சோழர்கால பாசன திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என நடைப்பயணம் துண்டு பிரசுரம் வழங்குவது என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். ஆனால் இது குறித்து இந்த அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளும் வறண்டே காணப்படுகிறது. இந்த பாசன ஏரிகளுக்கு அருகில் சில கிலோமீட்டர் தூரத்தில் செல்லும் கொள்ளிடம் ஆற்றில் இருந்து வீனாக கடலில் கலக்கும் நீரை ஏரியில் நிரப்ப நடவடிக்கை எடுக்காத துப்பில்லாத ஆட்சியாக உள்ளது. இதனை தூக்கி எறிய வேண்டுமா வேண்டாமா. இந்த ஆட்சியை என்னிடம் கொடுங்கள் தமிழகத்தின் தலையெழுத்தை என்னால் மாற்ற முடியும். ஆறு மாதம் பொருத்து இருங்கள் நமது ஆட்சி வரும் நமது கூட்டணியின் ஆட்சி வரும் ஆட்சி வந்த உடன் ஒரே மாதத்தில் சோழர் பாசன திட்டத்தை நான் அறிவிப்பேன். மூன்றாண்டு காலத்தில் இந்த திட்டத்தை என்னால் நிறைவேற்ற முடியும். 2500 கோடி ரூபாய் செலவு செய்தால் அனைத்து ஏரியிலும் கொள்ளிட நீரை நிரப்ப முடியும். ஆனால் விளம்பரத்திற்காக பொன்னேரியை தூர்வார பன்னிரண்டு கோடியை அறிவித்தார்கள் வெறும் அறிவிப்பாகவே உள்ளதுக்ஷ தமிழ்நாட்டை நாசப்படுத்தியது போதும் இவர்களுக்கு எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற விவஸ்தையே கிடையாது. ஸ்டாலினுக்கு விவசாயம் என்றால் என்ன என தெரியுமா நீர் மேலாண்மை என்றால் என்ன என்பது தெரியுமா தெரியாது. தமிழ்நாட்டில் ஒவ்வொரு உரிமையும் இழந்து கொண்டிருக்கிறோம் கருணாநிதி காலத்தில் கச்சத்தீவை தாரை வார்த்து கொடுத்தார். இது குறித்து கருணாநிதி வாயை தொறக்கவில்லை. காவேரி உரிமையை இழந்து விட்டோம் இவ்வாறு ஒவ்வொரு உரிமையும் இழந்து கொண்டிருக்கிறோம். மீண்டும் திமுக ஆட்சி வந்தால் ஒவ்வொன்றையும் விளம்பரப் படுத்திக் கொண்டுதான் இருப்பார்கள். எனவே ஊழல் திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் காலம் வந்துவிட்டது வரும் டிசம்பர் 17 ஆம் தேதி ஒரு சிறை நிரப்பும் போராட்டத்தை அறிவித்துள்ளேன் வன்னியர்களுக்கு குறைந்தது 15 சதவீத இட ஒதுக்கீடு வேண்டும் என வலியுறுத்தி அறிவிக்கப்பட்டுள்ளது அதற்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் இந்தப் போராட்டம் எனது தம்பிகளுக்கும் தங்கைகளுக்கும் படிப்பு வேண்டும் வேலை வேண்டும் என்பதற்காக தான். இதற்காக எந்த தியாகத்தையும் செய்ய நான் தயாராக உள்ளேன். வேண்டுமென்றே ஒரு சமுதாயத்தை ஒழிக்க வேண்டும் ஒரு சமுதாயத்தை அழிக்க வேண்டும் படிக்கக்கூடாது வேலைக்கு போகக்கூடாது இந்த சமுதாயம் அடிமையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ன்னிர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்காமல் இருக்கின்றார். அதனால் தான் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் ஒரு வன்னியர் கூட திமுகவிற்கு ஓட்டு போடக்கூடாது வன்னியர்களின் துரோகி ஸ்டாலின். முதலமைச்சர் வன்னியர்களுக்கு திமுக இவ்வளவு பெரிய துரோகம் செய்துள்ளது. இதை சிந்தித்து பார்க்க வேண்டும் எனவே டிசம்பர் 17 முக்கியமான போராட்டம். இந்த நேரத்தில் காடுவெட்டி குரு என்னுடன் இல்லை என்பது என்னுடைய மிகப்பெரிய வருத்தம். காடுவெட்டி குரு என்னுடன் இருந்திருந்தால் நமது கட்சியில் இந்த குழப்பங்கள் எல்லாம் வந்திருக்காது. அவர் இருந்திருந்தால் இன்னைக்கு திமுகவின் கைக்கூலிகள் ஐயாவை சுற்றி சுற்றி ஐயாவின் மனசை மாற்றி ஐயாவை குழப்பிக் கொண்டிருக் கிறார்கள். காடுவெட்டி குரு இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. அதனாலதான் காடுவெட்டி குரு இல்லாதது மிகவும் மன வேதனையாக உள்ளது. இதையெல்லாம் மீறி நாம் முன்னேறுவோம். நமது இலட்சியத்தை அடைவோம் உறுதியாக அடுத்த ஆட்சி நமது ஆட்சி. நீங்கள் முடிவு பண்ணினால் நான் கையெழுத்தை போடுவேன் என்னால் போட முடியும் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் அந்த கையெழுத்தை நாம் போடும் சூழல் ஏற்படும். இதற்காகவாவது நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டும் திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம் நமது உரிமையை மீட்டெடுப்பேம் என பேசினார் கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி அன்புமணி ராமதாஸ் அணியின் மாநில மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



அமைச்சர் சுப்பிரமணியன் நாமக்கல் மாநகராட்சி பழைய அரசு மருத்துவமனையில் ரூ.3.34 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து சித்த மருத்துவமனை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் பிற பணிகளில் பணியாற்ற உள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார். உடன் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் / நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஆர்.என். இராஜேஸ்குமார், இந்திய மருத்துவம் (ம) ஹோமியோபதி துணை ஆணையாளர் விஜயலட்சுமி, மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மேயர் கலாநிதி உட்பட பலர் உள்ளனர்.



சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.37.03 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப் பணிகளை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார். உடன் சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் மா. சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் உமாராணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# மணப்பாறையில் டாக்டர் துரை மாணிக்கத்திற்கு புகழ் அஞ்சலி



மணப்பாறை நவ 03

மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் முன்பு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் முன்னல் மாநில செயலாளர் டாக்டர் துரை மாணிக்கத்தின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தில் அவரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்துவி புகழ் அஞ்சலி நடைபெற்றது

தமிழ்நாடு விவசாய சங்க புறநகர் மாவட்ட செயலாளர் பழனிச்சாமி இன் நிகழ்வுக்கு தலைமை வகித்தார் ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் முன்னிலை வகித்தனர்

தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித் அவரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்துவி அவருடன் பயணித்த அனுபவங்களையும் காவேரி நதிநீர் கூறித்து தீர்க்கமன பார்வை கொண்டு இருந்தார் விவசாயத்தை பற்றிய வினாக்களுக்கு உடன் பதில் தரக்கூடிய ஆற்றால் பெற்ற தோழர் என்று புகழ் உரை நிகழ்தினார்

ஏ.ஐ.டி.யூ.சி போக்வரத்து கழக மாநில துண்ச் செயலாளர் சுப்ரமணியன் சிபிஜ திருச்சி புறநகர் மாவட்ட பொருளாளர் ஜனசக்தி உசேன் மாவட்ட குழு உறுப்பினர் தங்கராசு வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பெருமாள் பொருளாளர் நல்லுச்சாமி தெற்கு ஒன்றியகுழு தங்கவேல் சின்னகண்ணு ரவிச்சந்திரன் மருங்காபுரி ஒன்றிய துணைச் செயலாளர் கோவிந்தராஜ்

முன்னல் நகர்மன்ற உறுப்பினர் சௌக்கத் அலி ஏ.ஐ.டி.யூ.சி ஆட்டோ சங்கம் கிருஷ்ண பெருமாள் சித்திக் மணிகுமார் உட்பட சி.பி.ஐ. ஏ.ஐ.டி.யூ.சி விவசாய சங்க நிர்வாகிகள் மாலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்

# மணப்பாறையில் காரில் கடத்தி வந்த கஞ்சா போக்குவரத்து போலீசார் விரட்டி பிடித்தனர்

## காரை சாலையில் விட்டு விட்டு கடத்தல் கும்பல் தப்பி ஓட்டம்,



திருச்சி, நவ. 3–

திருச்சி மாவட்டம் மணப்பாறை விராலி மலை சாலை ஆண்டி கவுண்டம்பட்டி அருகே போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் வெங்கடாசலம் தலைமையில் போக்குவரத்து காவலர்கள் தினேஷ் உள்ளிட்ட காவலர்கள் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஒரு சொகுசு கார் டெல்லி பதிவு எண்னுடன் வருவதை கண்ட போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் வெங்கடாசலம் சொகுசு காரை சோதனை செய்ய வேண்டி நிறுத்தும்படி கூறியதும் சொகுசு கார் டிரைவர் சற்று தூரம் தள்ளி வாகனத்தை நிறுத்தியுள்ளார் அப்போது காவலர் தினேஷ் வாகனத்தின் பேப்பரை காட்டும்படி கேட்டுள்ளார்பேப்பரை எடுப்பது போல் நாடகமாடிய கும்பல் திடீரென சொகுசு காரை எடுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் மணப்பாறையை நோக்கி பறந்தனர்.

சுதாரித்துக் கொண்ட காவல் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் தினேஷ் தங்களது இருசக்கர வாகனத்தில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் விரட்டி சென்றனர். இந்நிலையில் மணப்பாறை நகரில் முக்கிய பகுதியான மணப்பாறைப்பட்டி திரும்பும் சாலை அருகே போக்குவரத்து நெரிசல் ஏற்பட கார் சற்று வேகத்தை குறைத்து செல்லும்போது காவலர் தினேஷ் தனது இரு சக்கர வாகனத்தை காரின் முன்பு நிறுத்தி காரை மடக்கினார்.

பின்னர் காரில் இருந்த டிரைவர் உட்பட 4 பேரும் காரை சாலையின் நடு பகுதியில் அப்படியே நிறுத்திவிட்டு காரில் இருந்து இறங்கி ஓட்டம் எடுத்தனர்,

பின்னர் இதுகுறித்து போக்குவரத்து காவல்துறையினர் மணப்பாறை காவல் நிலையம் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளருக்கு தகவல் தந்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மணப்பாறை காவல்துறையினர் காரை மீட்டு காவல் நிலையத்திற்கு எடுத்து வந்து இது பற்றி மணப்பாறை காவல் துணை கண்காணிப்பாளர் தகவல் கொடுத்தனர் தகவலின் பேரில் காவல் துணை கண்காணிப்பாளர் காவியா காவல் நிலையத்திற்கு வந்து காரை சோதனை செய்தார்.

சொகுசு காரை சோதனை செய்தபோது பண்டல் பண்டலாக கஞ்சா பொட்டலம் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த போலீசார் கார் முழுவதும் சோதனை செய்து அதில் 40க்கும் மேற்பட்ட பண்டல்களில் கஞ்சா பொட்டலங்கள் இருப்பதை கைப்பற்றினர்.மேலும் சொகுசு காரில் ஐந்து நம்பர் பிளேட்டுகள் உள்ளதையும் கண்டுபிடித்தனர்.

மேலும் வாகனத்தின் பதிவு எண்களை வைத்து வாகனத்தின் உரிமையாளர் யார்? எந்த ஊரைச் சார்ந்தவர்கள் ? தப்பி ஓடிய நபர்கள் யார்? என்பது குறித்து அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா மூலம் தப்பி ஓடிய கஞ்சா கடத்தல் கும்பலை வலை பேசி தேடி வருகின்றனர்.

மணப்பாறையில் சினிமா பட பாணியில் போலீசார் மிகப்பெரிய கஞ்சா கடத்தல் கும்பலை விரட்டி சென்றது கடத்தல் கும்பல் தப்பி ஓடிய சம்பவம் மணப்பாறை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் சுமார் 2 கிலோ மீட்டர் காரை பின் தொடர்ந்து விரட்டி வந்த மணப்பாறை போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் வெங்கடாசலம் காவலர் தினேஷ் மற்றும் போக்கு வரத்து காவலர்களுக்கு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வாழ்த்து தெரிவித்தார். மேலும் பொதுமக்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# பெண்கள் குறித்து சர்ச்சை சி.வி.சண்முகத்துக்கு மீண்டும் சம்மன்

விழுப்புரம்: நவ. 3–

விழுப்புரத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த அதிமுக பூத் கமிட்டி பயிற்சி கூட்டத்தில் பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் எம்பி, வரும் தேர்தலில் அனைவருக்கும் இலவசமாக ஒரு பெண்டாட்டி என்று கூட அறிவிப்பார்கள் என பேசியிருந்தார்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி அனைத்திந்திய மாதர் சங்கத்தினர் மாநில மகளிர் ஆணையத்தில் புகார் அளித்தனர். இதையடுத்து சி.வி.சண்முகம் கடந்த 17ம் தேதி விசாரணைக்கு ஆஜராக மாநில மகளிர் ஆணையம் சம்மன் அனுப்பியபோது, அவரது வழக்கறிஞர் ஆஜராகி நேரம் கேட்டிருந்தார். இந்த நிலையில் வருகிற 7ம் தேதி காலை 11 மணியளவில் விசாரணைக்கு ஆஜராகும்படி 2வது முறையாக சி.வி.சண்முகத்திற்கு மாநில மகளிர் ஆணையம் சம்மன் அனுப்பியுள்ளது.

## வைகை அணையில் இருந்து சிவகங்கை மாவட்டத்தின் 2ம் கட்ட பாசனத்துக்காக நீர் திறப்பு

வைகை அணையில் இருந்து சிவகங்கை மாவட்டத்தின் 2ம் கட்ட பாசனத்துக்காக 2,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இன்று முதல் அடுத்த 5 நாட்களுக்கு விநாடிக்கு 2,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. நீர் திறப்பால் சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 45,000க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். வைகை அணையில் இருந்து நீர் திறக்கப்படுவதால் 4 மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர். தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்ட கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421